*செய்தி வெளியீடு எண். 26-2016* *நாள்: 10.11.2016*

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் விழுப்புரம் மாவட்டம் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் வரும் 16.11.2016 அன்று ஸ்ரீ ராமகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

*****

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் மாற்றுத்திறனாளிகளை ஊக்குவிக்கும் பொருட்டு விழுப்புரம் மாவட்ட அளவிலான விளையாட்டுப்போட்டிகள் 22.10.2016 அன்று நடைபெறவிருந்தது. அன்று ஸ்ரீ ராமகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் அரசு தேர்வு நடந்ததால் அப்போட்டிகள் 16.11.2016 அன்று ஸ்ரீ ராமகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் தடகளத்தில் 1) கை, கால் ஊனமுற்றோர் பிரிவில் ஆண்கள்/ பெண் இருபாலருக்கும் 50மீ ஓட்டம், 100மீ ஓட்டம், நீளம் தாண்டுதல், மினி கூடைப்பந்து எறிதல் மற்றும் வீல் சேர் ரேஸ் 100 மீட்டர், 2) பார்வையற்றோர் பிரிவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 50மீ ஓட்டம், 100மீ ஓட்டம், நின்ற நிலையில் தாண்டுதல், குண்டு எறிதல் டென்னிஸ் பந்து எறிதல், 3)மனநலம் பாதிக்கப்பட்டவர் பிரிவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 50மீ ஓட்டம், 100மீ ஓட்டம், கிரிக்கெட் பந்து எறிதல், நின்ற நிலையில் தாண்டுதல் மற்றும் குண்டு எறிதல் 4)காதுகேளாதோர் பிரிவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 100மீ ஓட்டம், 200மீ ஓட்டம், நீளம் தாண்டுதல், குண்டு எறிதல் மற்றும் ஈட்டி எறிதல் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளது.

கை, கால் ஊனமுற்றோர் பிரிவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான இறகு பந்து போட்டியில் ஒற்றையர் மற்றும் இரட்டையரும், மேசைப்பந்து போட்டியில் ஒரு அணியில் இரண்டு பேரும், பார்வையற்றோர் பிரிவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கையுந்துபந்து போட்டியில் ஒரு அணியில் ஏழு பேரும், மனநலம் பாதிக்கப்பட்டவர் பிரிவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான எறிபந்து போட்டியில் ஒரு அணியில் ஏழு பேரும், காதுகேளாதோர் பிரிவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கபாடி போட்டியில் ஒரு அணியில் ஏழு பேரும் கலந்து கொள்ளலாம்.

மேற்படி போட்டிகளில் கலந்து கொள்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவரால் வழங்கப்பட்ட மருத்துவச்சான்று/ மாவட்ட மாற்றுத்திறனாளி மறுவாழ்வு அதிகாரி அவர்களால் வழங்கப்பட்ட சான்று/ தலைமை அலுவலகத்தால் வழங்கப்படும் தடை இல்லாத சான்று பெற்றிருக்க வேண்டும். இப்போட்டியில் கலந்து கொள்ள வயது வரம்பு கிடையாது. மேலும் மாவட்ட போட்டிகளில் முதல் இடத்தை பெறுபவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள தகுதியானவர்களாவார்கள். மேலும் இப்போட்டிகளில் கலந்துகொண்டு முதல் மூன்று இடங்களில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். எனவே விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் அதிக அளவில் இப்போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.